1975 மார்ச்சு 14]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இந்த வழக்கை பொறுத்த வரையில் இழப்புக்கு மேல் அபராதம் வசூல் செய்யப்பட்டது. உடனடியாக சட்டப்படி அவர்களை வேலையிலிருந்து டிஸ்மிஸ் பண்ண வேண்டும். முதல் கட்டமாக தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன்: சார், இந்தத் தேக்கு மரத் திருட்டிலே இதற்காக ரூ. 71,000 வசூலிக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இம்மாதிரி மரங்கள் திருட்டுப் போகும்போது அதற்கு என்ன மதிப்பாகிறது என்று கணக்கிட்டு அந்தப் பணத்தை வசூலிப்பதால் மட்டுமே மேற்கொண்டு திருட்டு நடக்காமல் தடுக்கப்படுமா? அந்த நபர்களை கிரிமினல் வழக்கில் பதிவு செய்து ஜெயிலில் அடைப்பதின் மூலமாகத்தானே மரங்களுக்கு இன்னும் அதிகமாக பாதுகாப்பைக் கொடுக்க முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, கிரிமினல் வழக்குச் சட்டப்படி போடக்கூடிய வழக்குகளுக்குப் போடலாம்.

நீலகிரி மலையிலுள்ள மரங்கள்.

* 323 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீலகிரி மலையிலிருந்து கேரளாவில் அமைந்துள்ள பிர்லாவுக்குச் சொந்தமான செயற்கை பட்டு தொழிற்சாலைக்கு மரங்களை வெட்டிக் கொண்டு போக அனுமதி தரப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் அளித்திருக்கிறார்கள். மேட்டுப்பாளையத்தில் ஆயிரக்கணக்கான டன்கள் நீலகிரி மலையிலிருந்து வெட்டப்பட்ட மரங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதை பார்க்கலாம். தொடர்ந்து கேரளாவுக்குச் செல்கிறது என்பதை இன்றைக்குப் போனாலும் பார்க்கலாம். போன சட்ட மன்ற கூட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பழனியப்பன் அவர்கள் வலியுறுத்திப் பேசினார்கள். அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்வதை விட ஆராய்ந்து பார்த்து, தமிழ் நாட்டு மரங்கள் கேரளாவுக்குச் செல்வதை, பிர்லா கம்பெனிக்குச் செல்வதைத் தடுக்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1975 மார்ச 14]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, கேரளாவிலுள்ள தொழிற்சாலைக்கு நீலகிரியிலிருந்து மரங்களை வெட்டிக் கொண்டு போக அனுமதி தரப்பட்டுள்ளதா என்பது கேள்வி. வன இலாக்கா காண்ட்ராக்ட்டுக்கு விடும் மரங்களை அனுப்பக் கூடாது. சட்டத்திற்கு உட்பட்டு ஏலத்திலே விடப்படுகிறது. காண்ட்ராக்ட்டு விட்டதை, சட்டப்படி ஒப்பந்தப்படி விட்டதை அனுப்ப முடியாது. இரண்டாவதாக, தனியார் கிளியர் செல்லிங்-க்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி கொடுக்கிறார்கள். ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்திற்கும் மரங்கள் அனுப்பப்படுவதை அரசியலமைப்புச் சட்டப்படி தடுக்க முடியாது. பர்மிட் வாங்கிக் கொண்டு செல்கிறார்கள். அரசுத் துறையிலே கொடுப்பதில்லை, அரசுத் துறையிலே காண்ட்ராக்ட் விடப்பட்டு வெட்டினாலும் அனுப்பப்படுவதில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், மேட்டுப்பாளையத்தில் ரயான் தொழிற்சாலைக்கான மரங்கள் வெட்டப்படுகின்றன. மறுபடியும் அதே இடத்தில் வைத்து, பயிரிட மரங்கள் இல்லாததால், இப்பொழுது வேப்ப மரம் முதற் கொண்டு வெட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே, இம் மாதிரி தொழிற்சாலைகளுக்காகத் தனியாக காட்டிலாக்கா மூலம் மரங்கள் வளர்க்கத் திட்டமிடப்படுமா என்பதைச் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, மரங்கள் வளர்ப்பதில் பல்வேறு முறைகள் இருக்கின்றன. quick growing trees என்று மேல் நாடுகளில் புளுகம், யூகலிப்டஸ் போன்ற மரங்கள் எட்டு, ஒன்பது ஆண்டுகளில் வளர்ந்து தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் வகையில் வளர்கிறது. அப்படிப்பட்ட மரங்கள் நீலகிரியில், விஸ்கோஸ் தொழிற்சாலையிடம் ஒப்படைக்கப்பட்டு, 8 ஆண்டுகள் கழிந்துவிட்டால் வெட்டி உடனடியாகப் பயிரிடுகிறோம்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அரசாங்க காடுகளிலிருந்து மரங்களை வெட்டி கேரளாவுக்குக் கொண்டு செல்வதில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், நடப்பது என்னவென்றால், ...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் விளக்கம் கொடுக்க வேண்டாம். அவர் சொல்வதை ஏற்றுக் கொள்ளுங்கள். தவறாக இருந்தால் பிரிவிலேஜ் மோஷன் கொண்டு வாருங்கள்.

திரு. சு. துரைசாமி : இதை விசாரித்து பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, அவர்கள் பதில் சொன்னார்கள். அவர்களிடத்தில் நான் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். தனிப்பட்ட முறையிலே ஏதாவது நடந்தால், அதைச் சொல்லட்டும். விசாரித்து நடவடிக்கை எடுக்கலாம்.